BESE-046

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## December, 2008

## BESE-046 : தமிழ் கற்பித்தல் (TEACHING OF TAMIL)

*Time allowed : 3 hours* *Maximum Weightage : 70%*

*குறிப்பு :*

*(அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

*(ஆ) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.*

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

கலைத்திட்டத்தில் தாய்மொழியின் இடம் யாது ? தாய் மொழி கற்பித்தலின் நோக்கங்களைக் கூறுக.

**அல்லது**

படித்தல் என்றால் என்ன ? படித்தலின் நோக்கம் யாது ? படித்தல் திறமையை மாணாக்கர்களிடையே வளர்க்க எவ்வெவ்வழிகளில் ஆசிரியர் பங்கு வகிக்கலாம் ?

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

வினாக்களின் பண்புகள் யாவை ? கற்பித்தலில் வினாக்கள் பெறும் இடம் யாது ? வினாக்களைத் திறமையான ஆசிரியர் எங்ஙனம் கையாளுவார் ?

**அல்லது**

சொற்பொழிவு முறையை விளக்குக. அதன் அடிப்படை திறன்களையும் நிறை குறை களையும் ஆராய்க. உம் வகுப்பறையில் சொற்பொழிவை பயன்படுத்திய முறைகளை விளக்குக.

**3.** கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் 4 வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(i) பள்ளி நூலகத்தின் முக்கியத்துவமும், அதைச்சார்ந்த மொழியாசிரியரின் கடமையும்.

(ii) இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை ? பள்ளிகளில் இலக்கணம் ஏன் வெறுக்கப்படுகிறது ?

(iii) மொழியின் எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கும் முறையினை விளக்கி கேட்டெழுதுதலின் நோக்கத்தைக் கூறுக ?

(iv) வாய்மொழி பயிற்சி வழி மொழிப்பாடம் கற்பிப்பதற்கான முறைகள் யாவை ?

(v) மொழி பயிற்றாய்வுக் கூடத்தின் (Language Laboratory) அமைப்பையும் பயன்களையும் விளக்குக.

(vi) நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள் யாவை ?

(vii) பிறர் உதவி பெற்றும், பெறாமலும் எழுதும் கட்டுரை என்றால் என்ன ? உதவிபெறாமல் கட்டுரை எழுதுவதின் சிறப்பு இயல்புகளை விவரிக்க.

(viii) திரு.வி.க. அவர்களின் தமிழ்ப்பற்றும் அவர்தம் மொழிநடையும்.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

ஆகுபெயரில் ஏதேனும் நான்கு வகையான ஆகுபெயர்களுக்கான பாடக்குறிப்பினை எழுதுக. அவற்றை கற்பித்தலின் பின் மதிப்பீடு செய்யும் வகையில் ஐந்து வினாக்களை எழுதுக.